



# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
*கொலேசெயர் 3 : 16*

மரம் 1 ஜூலை 2001 கனி 8

ஆசிரியர்
B. அர்ஜுனன்

## மூன்றாவது வாசகர் கருத்தரங்கம்

10.7.2001

*வாசகர்களுக்கு,*

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள் இக்கருத்தரங்கத்திற்கு ஈரோடு மற்றும் அண்டை மாவட்டத்து வாசகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதி இலவசம்.

**நோக்கம்:**
- 1992 முதல் 2000 வரை வெளிவந்த இதழைக் குறித்து ஓர் ஆய்வு
- இந்த இரண்டாவது கருத்தரங்கில் தாங்கள் கொடுக்கும் ஆலோசனை
- எதிர் காலத்தில் நமது இதழின் இலக்கு.

**நாள் :** ஜூலை 28ம் தேதி சனிக்கிழமை, காலை 10.00 மணி

**இடம் :** கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம் (பழைய கோர்ட் கட்டிடம்)
2, மணல்மேடு வீதி,
ஈரோடு–1.

மேலும் விபரமறிய
**The Word of Christ,**
✆ (04543) 23278

*அன்புடன்,*
ஆசிரியர்

*வாருங்கள் !* *பங்கு பெறுங்கள் !!* *அறிந்து கொள்ளுங்கள் !!!*

**இதழின் உள்ளே . . .** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | பெருமை | 1 |
| 2. | பொது அறிவுக் களஞ்சியம் | 5 |
| 3. | வேதாகமம் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டதா? | 6 |
| 4. | தெரிந்து கொள்ளுங்கள் | 8 |
| 5. | மதத்தில் சத்தியமும், அதிகாரமும் | 9 |
| 6. | ஒரு வழிப்பாடம் | 11 |
| 7. | தேவனுடைய வாக்குத்தத்தங்கள் (பெண்கள் பகுதி) | 13 |
| 8. | முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் | 14 |
| 9. | நீங்கள் வந்து சேர்ந்தீர்கள் | 16 |
| 10. | புதிய ஏற்பாட்டு புத்தகங்களுக்கு குறிப்புகள் | 20 |


FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" mark 16:15


**Published by**
**WORLD LITERATURE PUBLICATIONS**
**Post Box No. 5, Batlagundu - 624 202.**
**SOUTH INDIA.**

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 1 ஜூலை 2001 கனி 8

ஆசிரியருரை

# பெருமை PRIDE



மனுஷனை தீட்டுப்படுத்தும் பாவங்களில் பெருமையும் ஒன்று, உலகத்தில் வாழ்கின்ற ஜனங்களில் தொன்னூறு சதவிகிதத்தினர் பெருமையுடன் வாழவே ஆசைப்படுகின்றனர். காரணம் மற்றவர்களோடு ஒப்பிட்டுபார்த்து அவர்களைவிட மேலான நிலைக்கு வளரவேண்டும் என்று ஒவ்வொரு நாளும் மனிதன் பிரயாசப்படுகிறான். இந்த எண்ணம் சரியானது தானா? என்று அவன் சற்றும் யோசிப்பதில்லை. இதில் பல கிறிஸ்தவர்களும் பெருமைக்கு அடிமையாகிவிடுகின்றார்கள். பெருமையானது மனிதனுடைய இருதயத்தில் வளர்ந்து காலப்போக்கில் போட்டியை ஏற்படுத்தி விடுகிறது. போட்டி தலைதூக்கும் போது வன்முறைகளும், கொலைகளும் ஏற்படுகின்றன. "பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" (மாற் 7:23) என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார்.

முதலாவது நாம் வாழ்கின்ற வாழ்க்கை கர்த்தருக்கு பிரியமானதாக இருக்கின்றதா என்பதை சீர்தூக்கிபார்க்கவேண்டியது மிக அவசியமாயிருக்கின்றது. "ஏனென்றால் பெருமையுள்ளவர்க்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1 பேது 5 : 5). தன்னைத்தான் பெருமை பாராட்டிக் கொண்டோ அல்லது மற்றவர்களால் புகழப்படும் வீண் புகழ்ச்சியை ஏற்றுக் கொண்டோ நாம் வாழும்போது தேவன் நமக்கு எதிர்த்து நிற்கிறார் என்பதை நினைக்க வேண்டும். "ஏரோது ராஜா வஸ்திரம் தரித்துக் கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம் பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன்

அவனை அடித்தான். அவன் புழு புழுத்து இறந்தான்" (அப். 12:21-23). இவனுடைய மரணத்துக்குக் காரணம் என்ன? ஜனங்கள் தன்னை புகழுகிற புகழ்ச்சியை அவன் பெருமையுடன் ஏற்றுக் கொண்டு கர்த்தருக்கு மகிமையை செலுத்தாதபடியால் புழுபுழுத்து இறந்தான் என வாசிக்கின்றோம். "மனுஷனுக்கு அவனுக்கு உண்டாகும் புகழ்ச்சியே சோதனை" (நீதி.27:21) என்ற வேத வசனத்திற்கேற்ப ஏரோது ராஜாவுக்கு நடந்தேறியது.

குடி குடியைக் கெடுக்கும் என்ற வாசகத்தை அநுதினமும் வாசித்துக் கொண்டே குடிக்கிறவர் ஏராளம். அதைப்போல வேத வசனங்களை பலமுறை வாசித்தும் பெருமை அடித்துக்கொண்டு வாழ்பவர்களும் ஏராளம். குடிபழக்கத்தை எப்படி தேவன் ஏற்படுத்தவில்லையோ, அப்படியே பெருமையையும் தேவன் ஏற்படுத்தவில்லை. இவைகளெல்லாம் பிசாசினாலுண்டானவைகள். "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண் டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1 யோ 2:16, 17). சத்துரு உலகத்தில் களைகளை விதைக்கிறான் உலகத்தின் முடிவோ சுட்டெரிக்கப்படுவது. இந்த உலகத்தில் ஆதிக்கம் செய்யும் பிசாசையும் அவனுடைய கிரியைகளையும் அழிக்கும்படிக்கு அவர் சிலுவையிலே வெற்றி சிறந்தார். "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்" (எபி. 2 : 14, 15). ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தில் பிரவேசிக்கும் போது பெருமையோடு வாழ்கிற வாழ்க்கையை அவர் தெரிந்து கொள்ளாமல் "தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர்சாயலானார்" (பிலி. 2: 6,7).

இயேசுவை சோதித்த பிசாசு தன் பெருமைக்கு அடிபணியவைக்க முயற்சித்து "உலகத்தின் சகலராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து; நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு : அப்பாலேபோ சாத்தானே" என்றார் (மத். 5 : 8-10). இன்று உலகத்தின் மகிமைக்கு மயங்காதவர்கள் எவருமே இல்லை என்றே சொல்லலாம். ஆனால் இயேசுவையோ பிசாசு தன் இச்சைக்கு

இழுக்க முடியவில்லை. இயேசுவோ பிசாசை அங்கிருந்து துரத்தியடித்தார் என வாசிக்கின்றோம். "தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக். 4:7).

ஐசுவரியவான், லாசரு சம்பவத்தைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஐசுவரியவானோ இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். அதே நாட்களில் லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான். நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. ஒரு நாளில் அந்தத் தரித்திரன் மரித்து தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு பாதாளத்திலே கிடத்தப்பட்டான். அவன் பாதாளத்திலே வேதனைப்படுகிறதுபோது, தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான், அப்பொழுது அவன் தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும். இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேன் என்று கூப்பிட்டான்.


அதற்கு ஆபிரகாம் : மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான். அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய் (லூக் 16 : 19-25) என்றார். சற்று யோசித்துப்பாருங்கள் ஐசுவரியவான், தரித்திரன் லாசருவை பூமியில் இருக்கும் பொழுது நினைக்கவில்லை அவன் தனக்காகவே சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். மரித்த பின்பு லாசரு விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்ந்து என் நாவைக் குளிரப் பண்ணும் என்று ஆபிரகாமை பார்த்து கேட்கிறான். லாசருவை பூமியில் நினைக்காத ஐசுவரியவான் நித்தியத்திலே லாசருவின் உதவியை நாடுகிறான். இவனைப்போல சுகபோகமாய் பெருமையோடு தனக்காகவே வாழ்ந்து தன் ஆத்துமாவை அழித்துப்போடுகிற ஜனங்கள் அதிகம். "அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக" (பிலி 2 : 4) என்ற வசனத்தை அநுதினமும் நினைவு கூர்ந்து பெருமையான வாழ்க்கையை வெறுத்து. லாசருவைப்போல எந்த நிலைமையிலிருந்தாலும் பொறுமையுடனிருந்து தேவனுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள்" பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்" (பிர. 7:8).

அகாஸ்வேரு ராஜாவின் நாட்களில் சகலபிரபுக்களுக்கு மேலாக உயர்த்தப்பட்ட ஆமான் ராஜசமூகத்தில் பெருமையுடனிருந்தான். அதே ராஜாவின் அரண்மனையில் நேபுகாத்நேச்சார் காலத்தில் சிறைபிடிக்கப்பட்டவர்களில் ஒருவனாகிய மொர்தெகாய் என்னும்பேருள்ள ஒரு யூதன் இருந்தான். அவனோ ஆமானை மதியாமலும் அவனுக்கு வணக்கம் செலுத்தாமலும் இருந்துகொண்டு வந்தான். இதனால் மொர்தெகாய் மீது எரிச்சல் உள்ளவனானான். ஒரு முறை எஸ்தர்தான் செய்த விருந்திற்கு ராஜாவும், ஆமானும் வர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தாள். அந்தப்படியே அந்நாளிலே ராஜாவும் ஆமானும் விருந்துண்டு சந்தோஷமாயிருந்தார்கள். பின்னும் எஸ்தர் இன்னும் ஒருமுறை தாங்களுக்கு செய்யப்போகிற விருந்துக்கு வரவேண்டும் என்றாள். இதை நினைத்து அன்றையதினம் ஆமான் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாய்ப் புறப்பட்டு தன் குடும்பத்தாருக்கு இதை பெருமையுடன் அறிவித்து ராஜா தன்னை பெரியவனாக்கி தன்னைப் பிரபுக்கள் மேலும் ராஜாவின் ஊழியக்காரர் மேலும் உயர்த்தினார். இருந்த போதிலும் ராஜாவின் அரமனைவாசலில் உட்கார்ந்திருக்கிற அந்த யூதன் மொர்தெகாயை நான் காணுமளவும் அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லையென்றான். அப்பொழுது அவன் மனைவியும் சிநேகிதர்களும் ஐம்பது முழ உயரமான ஒரு தூக்குமரத்தை செய்து அந்த மொர்தெகாயை தூக்கிப்போடு என்று ஆலோசனை கொடுத்தனர். இது ஆமானுக்கு நலமாக கண்டதினால் அந்தப்படியே ஒரு தூக்கு மரத்தை செய்து தன் வீட்டண்டை நாட்டி வைத்தான்.


இரண்டாம் முறை ஆமான் விருந்திற்கு அழைக்கப்பட்ட போது சந்தோஷத்துடனும், பெருமையுடனும் சென்றான். ராஜாவோ தனக்கு விரோதமாக துரோகம் செய்ய நினைத்தவர்களுடைய நடபடி புஸ்தகத்தை வாசித்து அதை தமக்கு அறிவித்த மொர்தெகாய்க்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்பதை அறிந்து யோசித்துக் கொண்டிருக்கும்போது அங்கே அரமனை முற்றத்திலே வந்து நின்று கொண்டிருந்த ஆமானை அழைத்து ராஜா கனம் பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆமான் என்னையன்றி யாரை ராஜா கனம் பண்ண விரும்புவார் என்று தன் மனதிலே நினைத்து - ராஜாவுக்கு பிரதியுத்தரமாக ராஜ வஸ்திரம் தரித்து, ராஜா ஏறுகிற குதிரையிலே ஏற்றி நகரவீதியில் உலாவும்படி செய்யப்பட வேண்டும் என்றான். நீ அந்தப்படியே ராஜ அரண்மனையின் வாசலில் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய அந்த மொர்தெகாயுக்கு செய் என்றார். அந்தப்படியே ஆமான் மொர்தெகாயுவுக்கு செய்தான். அதன்பின்பு ராஜாவுடன் எஸ்தர் அழைக்கப்பட்ட இரண்டாம் விருந்துக்கு வந்தான். விருந்து வேளையில் எஸ்தரின் கோரிக்கை என்னவென்று ராஜா கேட்டார். அவளோ யூதருக்கு விரோதியான

துஷ்ட ஆமானை கைகாட்டினாள். அன்றைய தினமே ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தப்படுத்தி வைத்த தூக்குமரத்திலே ஆமானை தூக்கிப்போட ராஜா உத்தரவிட்டார். ஆமானுடைய பெருமைக்கு கிடைத்த பரிசு "படுகுழியை வெட்டுகிறவன்தானே அதில் விழுவான்" (நீதி 26 : 27) என்ற வசனத்தின்படி நடந்தேறியது.

ஆசியாவில் உள்ள ஏழுசபைகளுக்கு கர்த்தர் எழுதும்போது பிலதெல்பியா கிறிஸ்துவின் சபைக்கு இவ்விதமாக எழுதுகிறார். "என் பொறுமையைக் குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக் கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" (வெளி 2 : 10) என்கிறார். பிரியமான சகோதரனே, சகோதரியே உன் வாழ்வில் நீ எப்படி இருக்கின்றாய்? பெருமை உள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கிறார். நீ பெருமையான வாழ்வை விரும்புவாயானால் உனக்கு தேவனே எதிராகயிருப்பார். உலகத்திலே பிசாசினால் உண்டாக்கப்பட்ட பெருமையை நீ வெறுத்து, கர்த்தர் சொல்லும் பொறுமையை யோபுவைப்போல பொறுமையாக இருந்து கைக்கொள்வாயானால் வரக்கூடிய சோதனைக் காலங்களில் உன்னை காப்பார்.



## பொது அறிவுக் களஞ்சியம்



### ஒலிம்பிக்ஸ்

கிரீஸ் நாடு உலகிற்கு வழங்கியதுதான் ஒலிம்பிக்ஸ். இதில் அனைத்து நாடுகளின் ஒன்றிணைப்பின் மூலம் சகோதரத்துவம் வளர வழிவகுக்கப்பட்டது. முதன் முதல் ஆல்தேய் நதிக்கரையில்தான் இது அரங்கேறியது. கிரீஸின் புண்ணியத்தலங்களுள் ஒன்றான ஒலிம்பியா என்ற பெயரே இதற்கு சூட்டப்பட்டுள்ளது.

இதன் சின்னம், ஒன்றுடன் ஒன்று பின்னப்பட்ட ஐந்து வளையங்கள் ஆகும். இவ்வளையங்களின் வண்ணங்கள் நீலம், சிவப்பு, கருப்பு, பச்சை, மஞ்சள் ஆகும். இவை ஐந்து கண்டங்களின் ஒன்றிணைப்பைக் காட்டவே அமைக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் தீபம் என்பது ஒலிம்பியாவில் சூரிய ஒளிக்கதிர்களால் ஏற்றப்பட்டு, பந்தயம் நடைபெறும் நாட்டிற்கு தொடர் ஓட்டக்காரர்களால் எடுத்து வரப்படுவது. ஒலிம்பிக் கொடி வெள்ளைப் பின்னணியில் அமைந்திருக்கும் ஐந்து வளையங்களைக் கொண்டது.

# வேதாகமம் தேவ ஆவியின் ஏவுதலால் எழுதப்பட்டதா?

# Has the Bible written by Inspiration?

**J.C. Choate**



வேதாகமம், உலகம் ஒரு போதும் அறிந்திராத மிக வியப்பும், அதிசயமும் நிறைந்த ஒரு புத்தகம். கோடிக்கணக்கில் எழுதப்பட்டுள்ள அத்தனைப் புத்தகங்களிலும், வேதாகமம் தனித்தன்மையுடன் விளங்குகிறது. 1600 ஆண்டு காலமாக 40 மனிதர்கள் இதை எழுதுவதில் ஈடுபட்டிருந்தனர். கிழக்கே பாபிலோனிலிருந்து மேற்கே ரோமாபுரி வரையிலும் ஐந்து மாறுபட்ட நாகரீகமுள்ள மக்கள் இதை எழுதியிருக்கின்றனர். அரசர்கள், தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், அதிகாரிகள், செம்படவர்கள், ஆயர்கள், படைத்தலைவர்கள், வைத்தியர்கள், சிறைக்கைதிகள், கவிஞர்கள் சில படித்தவர்கள் மற்றும் சில படிக்காதவர்கள் ஆக வாழ்வின் வித்தியாசமான பல நிலைகளிலுமிருந்து வந்த எழுத்தர்கள் இதின் பக்கங்களை எழுதியிருக்கின்றனர் என்ற போதிலும் 31,173 வசனங்களை 66 புத்தகங்களுக்குள் அடக்கியுள்ள வேதாகமம், ஒரே ஒரு முக்கியமான மையக்கருத்தைக் கொண்டுள்ளது. மனுக்குலத்தின் இரட்சிப்பின் பேரில் தேவனுக்குள்ள விருப்பத்தையும், அன்பையும் அது வெளிப்படுத்துகிறது.

இந்தக் குறிப்பிடத்தக்க உண்மைகளைப் பற்றி நாம் என்ன சொல்லவிருக்கிறோம்? வேதாகமம் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. (2 தீமோ 3 : 16) "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது". "அருளப்பட்டிருக்கிறது" என்ற வார்த்தைக்கு "ஏவப்பட்டிருக்கிறது என்று பொருள். அதாவது ஒரு வெளி சக்தியின் தூண்டுதல் இயற்கையின் வல்லமைக்குப் புறம்பாக செயல்படுதல் என்பதாகும். இப்படியாக தீர்க்க தரிசனங்கள் முழுவதும் "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி" என்பதாக 3800 இடங்களில் நமக்கு நினைப்பூட்டுகிறது. மனிதன் மூலமாக தேவன் மனிதனிடம் பேசுவதே வேதாகமம்.

தேவ ஆவியினால் வேதாகமம் எழுதப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் :

வேதாகமம் அழியாததாக இருக்கிறது. நாத்திகர்கள், புற சமயத்தார், உலக அரசுகள், ஊழலில் ஊறிப் போன மதங்கள், ஆகிய அனைவரின் கூட்டு எதிர்ப்புகளையெல்லாம் முறியடித்து அது தலைநிமிர்ந்து நின்று கொண்டிருக்கிறது. தவறாக வழி நடத்தப்பட்ட

விஞ்ஞானிகள், படித்த மேதாவிகளான விரோதிகள் அதை தாக்கியிருக்கின்றனர் என்ற போதிலும் தாக்கியவர்கள் தகர்ந்து போனார்களே தவிர, வேதாகமம் எவ்வித சேதமும் இன்றி இன்றும் உறுதியோடு நிற்கிறது.

வேதாகமம் மனித ஞானத்திற்கு எட்டாதது. இந்த பரிசுத்த புத்தகத்தை, தங்கள் வாழ்நாட்களையெல்லாம் செலவிட்டு உலகின் அறிஞர்கள் பலர் கற்றுக் கொள்ள முயன்ற போதிலும் ஆரம்பத்தில் எப்படியிருந்ததோ அதே போன்று, ஆழங்காணா இயலாத நிலையிலேயே அது இருந்திருக்கிறது. குறைந்த மனம் படைத்த மனிதனால் நிறைவான ஒரு தயாரிப்பை மேற்கொள்ள இயலாது.

வேதாகமம் எழுதப்பட்டிருக்கிற நடைமுறை வழக்கத்திற்கு மாறாக இருப்பது அதன் தெய்வீகத் தன்மையைக் காட்டுகிறது. சுருக்கமாக செய்திகள் பதிவு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. சிருஷ்டிப்பின் சரித்திரத்தையும் 2500 ஆண்டு கால நாகரிகத்தின் சரித்திரத்தையும் ஆதியாகம புத்தகம் சொல்லுகிறது. பதிவு செய்யப்பட்டவைகளில் தவிர்க்க பட்டவைகள் தேவ ஆவியின் ஏவுதலுக்குச் சான்று பகருகின்றன. தனது கதாநாயகனின் ஆரம்ப கால வாழ்வைப் பற்றி எந்த மனித எழுதத்தாளர் குறிப்பிடாமல் விட்டு விடுவார்? என்ற போதிலும், நற்செய்தியின் நான்கு எழுத்தர்களும் அவ்வாறு செய்திருக்கின்றனர். பேதுரு, பவுல் ஆகியோரின் பணிகளைப் பற்றிக் கூறும் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் மற்ற அப்போஸ்தலர்களின் பணி பற்றி எதுவும் கூறவில்லை. மனிதர்கள் இந்த மாதிரியாக புத்தகங்களை எழுதுவதில்லை. எழுத்தின் பாரபட்சமற்ற தன்மை வித்தியாசமாக அமைந்திருக்கிறது. பத்சேபாளுடன் தாவீது செய்த பாவம், கிறிஸ்துவை மறுதலித்த பேதுரு இன்னும் இது போன்ற பதிவு செய்யப்பட்டுள்ள பல காரியங்கள் எல்லாம், சாதாரண எழுத்தாளர்கள் கையாளாத முறையில் வேதாகமம் எழுதப்பட்டிருப்பதைக் காட்டுகிறது.

தேவ ஆவியால் ஏவப்பட்ட ஒரு எழுத்தாளரால் மட்டுமே நிறைவேறிய தீர்க்கதரிசனங்களைப் பற்றி எழுத முடியும். தொல் பொருள் கண்டுபிடிப்புகள் எல்லாம் சரித்திரம், புவியியல், பழங்கால மக்கள் பற்றிய வேதாகமக் கூற்றுகளோடு ஒத்துப் போகின்றன.

மனுக்குலத்தின் பேரில் வேதாகமத்தின் தாக்கம் (நன்மையான காரியத்தில்) எழுதப்பட்டுள்ள வேறு சகல புத்தகங்களிலிருந்தும், அதை வேறுபடுத்திக் காட்டுகிறது. வேதாகமம் எங்கெல்லாம் பரவி, படிக்கப்பட்டு, விசுவாசிக்கப்பட்டு வந்துள்ளதோ அங்கெல்லாம் நாகரீகம் உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதோடு, தனிப்பட்ட சுதந்திரமும் முழுவதுமாக உணரப்பட்டுள்ளது. எங்கு வேதாகமம் இல்லையோ அங்கு கொடுங்கோலாட்சி, அடிமைத்தனம், அறியாமை எல்லாம் ஆளுகின்றன.

வேதாகமத்தை பணிவுடனும், அக்கரையுடனும் படிக்க நேரத்தை ஒதுக்குங்கள். இப்புத்தகத்தின் தேவ ஆவியின் ஏவுதலின் நிரூபணத்தை நீங்கள் உணர முடியும். ஒருவருடைய வாழ்க்கையில் ஏற்படுத்தும் ஆழமான அதின் செல்வாக்கும், மாற்றங்களும் அது வெறும் மனிதனால் எழுதப்பட்டதல்ல என்பதை நிரூபித்துக் காட்டுகிறது எந்த நூற்றாண்டாயிருப்பினும், எந்த நாட்டைச் சார்ந்தவராயினும், வேதாகமத்தை படிப்பவரில் எழுச்சிமிக்க ஒரு செல்வாக்கை அது ஏற்படுத்துகிறது. வேதாகமம் தேவன் நமக்கு அளித்திடும் செய்தி.

வேதாகமத்தைப் பற்றிய உங்கள் ஞானம் எந்நிலையில் உள்ளது? நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? நான் ஏன் இங்கு இருக்கிறேன்? நான் எங்கே செல்லப் போகிறேன்? - என உங்கள் ஆத்துமா அறிந்து கொள்ள ஆவலாக இருக்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்க உங்களால் கூடுமா? வேதாகமம் மட்டுமே இக்கேள்விகளுக்குத் தெளிவான, திருப்தியான பதில்களை அளிக்கக் கூடும்; அளிக்கிறது.

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்**

**சென்ற மாத ஒரு வழி பாடம்**

**பகுதி IIன் இறுதித் தேர்வு பாடம் 1 –12ன் விடைகள்**

1-D, 2-C, 3-B, 4-A, 5-B, 6-D, 7-B, 8-C, 9-B, 10-D, 11-B, 12-A, 13-B, 14-B, 15-B, 16-B, 17-B, 18-A, 19-B, 20-C, 21-C, 22-B, 23-A, 24-B, 25-C

## தெரிந்து கொள்ளுங்கள்

★ வேதாகமத்தில் "கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி" என்று 3800 முறை கூறப்பட்டுள்ளது. (தீர்க்கதரிசனங்கள் முழுவதும்)

★ கர்த்தர் சொல்லுகிறதாவது என்பது 2000 முறை வேதத்தில் கூறப்பட்டுள்ளது

★ இயேசு கிறிஸ்துவைக் குறித்து மட்டும் சுமார் 330 தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் நிறைவேறியுள்ளது.

★ ஏறத்தாழ 1600 வருடங்களில் இப்புத்தகம் தேவ மனிதர்களால் வெவ்வேறு இடங்களிலிருந்து எழுதப்பட்டது.

★ நோவாவின் பேழை ரஷியாவில் உள்ள லெனின் கிராடு மியூஸியத்தில் உள்ளது. பூமி உருண்டை ஏசாயா 40 : 22ன்படி கண்டுபிடிக்கப்பட்டது.

★ முதல் நூற்றாண்டில் வேதாகமத்தின் ஒரு பிரதியும் கூட இல்லாமல்போகும்படி செய்யப்பட்டது.

★ ஆனால் இன்றும் நாம் வேதாகமத்தை உடையவர்களாய் இருக்கின்றோம்.

***"வானமும் பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியுள்ளார்***

*(மாற்கு. 13 : 31)*

***– Selected***



# மதத்தில் சத்தியமும் அதிகாரமும்

**விரிவுரை – 3**

***By - Rod Rutherford***

முன்னுரை

1. சத்தியம் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்று அநேகர் நம்புகின்றனர்.

a. சிலர் சொல்லுவது "ஒருவன் எதை விசுவாசிக்கிறான் என்பது அல்ல, விசுவாசிப்பதில் உண்மையிருக்க வேண்டும்.

b. வேறு சிலர் "நாம் எல்லோருமே பரலோகத்திற்கு தான் போகிறோம். ஆனால் வித்தியாசப்பட்ட பாதையில்" என்கின்றனர்.

2. அடிப்படை கேள்வி மத சம்பந்தமாக எழுகிறது. நம்முடைய மத அதிகாரத்தின் அடிப்படை எது?

3. ஒரு பொதுவான வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை எல்லோருமே ஏற்றுக் கொள்ளாத வரையில் "ஒருமைப்பாடு" ஏற்படுவது இயலாத காரியம்.

## திறனாய்வு

I சத்தியத்தின் தனிப் பண்புகளைப் பார்ப்போம் :

அ. சத்தியம் அறியப்படக் கூடியது, அது ரகசியமானதல்ல **யோவான் 8:32**

ஆ. சத்தியம் "வாங்க" தக்கது (பெற்றுக் கொள்ள கூடியது) அல்லது "விற்க" தக்கது (மறுதலிக்க கூடியது) **நீதி 23 : 23**

இ. சத்தியம் விடுதலையளிக்கிறது, பரிசுத்தப்படுத்துகிறது, சுத்திகரிக்கிறது. **யோவான் 8:31, 32; 17:17; 1பேதுரு 1:22**

ஈ. சத்தியம் கண்டிப்பாக கீழ்ப்படிவதற்கு **1 பேதுரு 1 : 22, 23**

உ. சத்தியம் கண்டிப்பாக செயல்படுவதற்கு **2 யோவான் 4**

ஊ. தவறு (சத்தியத்துக்கு எதிரானது) கண்டிக்கப்படத் தக்கது. **கலா 4:16; கலா 2:4, 5; 11-14**

எ. ஒருவன் இரட்சிப்பை பெற வேண்டுமானால் அவன் சத்தியத்தை நேசிக்க வேண்டும் **2 தெச 2 : 10-12;**

ஏ. சத்தியம் என்றால் என்ன? **யோவான் 18:38**

1. இயேசுவே சத்தியம் (அவரே சத்தியத்திற்கும் மூல காரணர், முடிவான உண்மை) **யோவான் 14 : 6**
2. தேவனுடைய வார்த்தையே சத்தியம் (தேவனால் வெளிப்படுத்தப்பட்ட அதிகாரமுள்ள, குறையேதுமற்ற தேவனுடைய சித்தம் - மனித சமுதாயத்திற்காக) **யோவான் 17 : 17**

II மதவுலகில், எந்தெந்த அளவீடுகளை தங்கள் மத அதிகாரங்களாக கொண்டிருக்கின்றனர் ?

1. மனிதக் கோட்பாடுகள். **2 தீமோ 3 : 16, 17**
2. பெற்றோர்கள். **எசேக். 18 : 20; ரோமர் 14 : 12**

3. பெரும்பான்மையினர். யாத். 23 : 2; மத் 7 : 13, 14
4. ஒரு ஊழியக்காரர், பாஸ்டர் அல்லது பாதிரியார். மத் 15 : 14; யாக் 3 : 1; 1 யோவான் 4 : 1; 1 ராஜா 13 : 1-32
5. தனக்கு தோன்றுகிறபடி, சொந்த விருப்பங்கள். நியா 21 : 25; எரே 10 : 23; 2 ராஜா 5 : 1- 14

III எது பிழையற்ற சத்தியத்தின் சிறந்த அளவீடு ? எது பரலோகத்திற்கு கொண்டு செல்லும் நிச்சயமான வழிகாட்டி ?

1. தேவனுடைய ஏவப்பட்ட வார்த்தை பரிசுத்த வேதாகமம் 2 சாமு 23 : 2; ஏசா 8 : 20; எரே 1 : 9; 2 தீமோ 3 : 16, 17; கலா 1 : 6-9; 2 பேதுரு 1:20, 21; 1 தெச 2 : 13
2. இந்த தேவனுடைய வார்த்தையை ஒருவன் மாற்றகூடாது. அதில் ஒன்றை சேர்க்க கூடாது, அல்லது அதிலிருந்து ஒன்றை எடுத்துப் போடக் கூடாது. உபா 4 : 3; நீதி 30 : 6; வெளி 22 : 18, 19
3. கடைசி நாளில், நாம் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு நியாயந் தீர்க்கப்படுவோம். யோவான் 12 : 48; வெளி 20 : 11, 12

**முடிவுரை**


1. சத்தியம் மாற்றத் தகுந்ததல்ல, பிழையற்றதும் கூட.
2. கணித பாடத்திலுள்ள உண்மைகளை நாம் புரிந்து கொள்கிறோம். ஏன் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்தை புரிந்து கொள்ள முடிவதில்லை.
3. எல்லா மாற்றுக் கொள்கைகளும் மாற்று நாமகரண கூட்டத்தாரையும், தேவனுடைய வார்த்தையைக் கொண்டு அளவிட்டு பார்த்தல் வேண்டும்.
4. தேவனுடைய அடிப்படை சத்தியத்தை ஏற்றுக் கொள்ளாத வரையில், நாம் ஒன்று சேர முடியாது, இரட்சிப்படைய முடியாது. எந்த வழியிலும் பரலோகத்தின் பிதாவை பிரியப்படுத்த முடியாது லூக் 6 : 46.

## வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள்

உங்கள் முகவரியில் பிழை இருந்தால் அல்லது முகவரி மாற்றம் இருந்தால் உங்கள் Ref. No. யை எழுதி 50 பைசா அஞ்சல் அட்டையில் கீழ்காணும் முகவரிக்கு தெரியப்படுத்தவும். புதிதாக இதழ் வேண்டுவோர் எப்படி இவ்விதழ் உங்களுக்கு கிடைத்தது என்ற விபரத்தை தெரியப்படுத்தவும்.

Editor
**The Word of Christ,**
P.O. Box 5,
Batlagundu - 624 202
Dindigul Dist.

# ஒரு வழி




## தேவனுடைய கிருபையை பிரயோஜனமாக்கிக் கொள்ளுதல்

## பிரிவு III

நம்முடைய பாவங்களுக்கான இயேசுவின் சிலுவை மரணத்தின் வரலாற்றுச் சம்பவமே சுவிசேஷம் என நீங்கள் கற்றிருக்கிறீர்கள். அவர் மறுபடியும் வரும் போது கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களும் நித்திய ஜீவனுக்கென்று எழுந்திருப்பார்கள் என்ற நம்பிக்கையை நமக்குக் கொடுக்கும்படிக்கு அவர் அடக்கம் பண்ணப்பட்டார், ஆனால் மூன்றாம் நாள் ஞாயிற்று கிழமை காலையில் எழுப்பப்பட்டார் என்பதையும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். தேவக்கிருபை பிரசன்னமானதே நற்செய்தி சம்பவமாகும். (தீத். 2:11). **இயேசு மறுபடியும் வரும்போது சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத அனைவரும் நித்திய அழிவை அடைவார்கள்.** எனவே ஒருவன் இயேசுவினுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்கு எவ்வாறாகக் கீழ்ப்படிகிறான்?

இரட்சிப்பிற்குத் தேவையான சகல ஆசீர்வாதங்களையும் பெறும்படிக்கு இயேசுவின் இரத்தத்தினால் நீங்கள் மீட்கப்பட்டிருக்கிறீர்களென வேதாகமம் வாக்களிக்கிறபடி கிறிஸ்துவுடன் ஒரு ஐக்கியத்தை நீங்கள் கொண்டிருக்க வேண்டும். இந்த இரட்சிப்பானது கிறிஸ்துவுக்குள் இருக்கிறது (2 தீமோ 2: 10) ஆனால் ஒருவன் எவ்வாறு கிறிஸ்துவுக்குள் வருகிறான்?

கிறிஸ்துவுக்குள் வரும்படிக்கு எவ்வாறு சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிய வேண்டுமென்பதை உங்களுடைய பாடங்களின் இந்தப்பிரிவில் நீங்கள் கற்றுக் கொள்வீர்கள். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிவதின் மூலம் தேவனுடைய கிருபைக்கு எவ்வாறு பதிலளிக்க வேண்டுமென்பதை நீங்கள் கற்றுக் கொள்வீர்கள்.

இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை புரிந்து கொள்ளும்படிக்கு, நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய காரியங்கள் உண்டு. தேவனைப் பிரியப்படுத்தும்படி தேவன் அவர்களை எதைச் செய்ய விரும்புகிறார் என அவர்கள் நம்புகிறார்களோ அதை அவர்களுடைய முயற்சிகளில்

செய்ய சமயப்பற்றுள்ள மக்களால் அடிக்கடி இந்தக் காரியங்கள் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது.

**கிருபை, நம்பிக்கை போன்றவற்றில் தேவனுடைய உடன்படிக்கை**

1. தேவன் மக்களோடு ஒரு புதிய உடன்படிக்கையை ஸ்தாபித்தார், அந்த உடன்படிக்கை ஒரு புதிய கற்பனையைக் கொண்டுள்ள கிறிஸ்துவின் கற்பனையாகும்.

2. ஒருவன் தானாக பாவத்திலிருந்து இரட்சிக்கப்படமுடியாது, இப்படியாக தேவனுடைய கிருபையை ஏற்றுக் கொள்ளுவதற்குக் கீழ்ப்படிந்திருப்பதின் மூலம் தேவனுடைய கிருபையைச் சார்ந்திருக்க வேண்டும்.

3. தேவக்கிருபையின் அடையாளம் அவருடைய கிருபையை ஏற்றுக் கொள்ளுவதற்கு தேவனுடைய நிபந்தனைகளுக்குப் பதிலளிக்க நம்மை செயல்படுத்த வேண்டும்.

4. உண்மையுள்ள மக்களின் மனசாட்சியின் மேல், மனிதருடைய வற்புறுத்தலான சமயப்பாரம்பரியங்களின் கட்டிலிருந்து தேவக் கிருபை நம்மை விடுவிக்கிறது?

*– இப்பிரிவின் பாடங்கள் தொடரும்*

## வேத அறிவுப் போட்டி எண் 11ன் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. அதிகாரம் | - | பிர. 8 : 4 |
| 2. அனனியா | - | நெகே. 7 : 2 |
| 3. அறிவும் | - | ஏசா. 33 : 6 |
| 4. தேவனுக்கு | - | ரோ. 14 : 12 |
| 5. தேவனுடைய | - | 1 பேது. 2 : 15 |
| 6. யோனா | - | யோனா. 1 : 9 |
| 7. அவருடைய (கர்த்தருடைய) | - | சகரி. 9 : 10 |
| 8. நூற்றுக்கு அதிபதி | - | மாற் 15 : 39 |
| 9. இஸ்ரவேலரை | - | அப். 7 : 42 |
| 10. உதவி, அந்நியரை | - | ரோ. 12 : 13 |



## வேத அறிவுப்போட்டி எண் 11ல் வெற்றிபெற்றவர்கள்

1. Mrs. கிரேஸ்லுாயிஸ் - நிலக்கோட்டை
2. A.மேரியம்மாள் - மதுரை
3. R. பெரியசாமி - செல்லுார்
4. N. டேனியல் தமிழ்வாணன் - மேல் விஷாரம்

## ஜெபியுங்கள்

1. ஆகஸ்ட் 15ம்தேதி வைகை அணையில் நடைபெற இருக்கும் கூட்டத்திற்காக
2. பாக்கிஸ்தானுடன் இந்தியா நடத்தும் பேச்சுவார்த்தை சமாதானத்துடன் முடிய
3. இம்மாதம் ஈரோட்டில் நடைபெறவிருக்கும் மூன்றாவது வாசகர் கருத்தரங்கிற்காக

பெண்கள் பகுதி

# தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

## God's Promises

- Betty Burton Choate

நீ இதனால் என்னை மீண்டுமாய் நம்பு,
"வயல்வெளிகளின் அழகிய பூக்கள் -
அவர் அவைகளை கவனிக்கிறார்
ஆகவே - கவலைப்பட அவசியமில்லை :
அவர் நம்மைக் கவனித்துக்கொள்வாரா?"
எவ்வளவு அதிகமதிகமாய்
ஆனால் கடந்த இரவு
கவலை கொள்ள அவசியமில்லாத ஒரு தாய்
கேட்டாள் சங்குகளின் சத்தத்தை,
கொண்டு வந்தார்கள் அவர்கள் அவளது குழந்தையை வீட்டிற்கு ....

எத்தனை முறை தேவனுடைய வார்த்தைகளை நாம் எடுக்கிறோம்
அவைகளை வாக்குத்தங்களாக உருவாக்குகிறோம்
அவர் ஒருபோதும் உருவாக்கவில்லை,
மேலும் அவருக்குள் விசுவாசத்தை இழக்கவில்லை
ஏனென்றால் நாம் நினைக்கிறோம் அவர் கைவிட்டார்? என
அவர் எங்கு வாக்களிக்கிறார் பாதுகாப்பை,
அபாயமின்மையை,
அவைகள் எல்லாம் இருக்கின்றது
'நல்லவையாகவே'
நாம் விரும்புகிறோம்?
அவர் ஒரு போதும்
அதை வாக்குப்பண்ணவில்லை.
அவர் கூறினார்
"நான் உங்கள் பாரங்களை எடுத்துக் கொள்வேன் ஏனென்றால் நான்
விசாரிக்கிறேன் ......"
அவர் கூறினார்,
"நன்மைக்காகவே
நான் எல்லாவற்றையும் செய்வேன்
நீ என்னை நேசித்தால் ......"

நமது நியாயத்தீர்ப்பு அவருடையது அல்ல
நமது நினைவுகள் அவருடையது அல்ல
சிலவேளைகளில் வாழ்க்கை வேதனையை பிழிகின்றது
ஆனால் நம்பிக்கையும் அன்பும் வளரமுடியும்
அந்த வேதனைக்குள்
அவருடைய வார்த்தைகளை சரியாக வாசிப்பாயானால்
விசுவாசத்தில் காத்திரு அதற்கான வழியைக்காண


1 பேது 5 : 7 ரோமர் 8 : 28

*தமிழில் : குளோரி அர்ஜுனன்*

# முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம்

*B. அர்ஜுனன்*

## சிறுவர் பகுதி



**வேதபகுதி : அப் 9:1 – 18**

முதல் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த சவுல் எனப்பட்ட ஒருவன் கர்த்தருடைய சீஷர்களை பயமுறுத்திக் கொண்டும், இயேசுவை பின்பற்றுகிற சகோதர, சகோதரிகளை கண்டு பிடித்து, அவர்களை கட்டி எருசலேமுக்கு கொண்டு போகவும் எத்தணித்தான். அது மாத்திரமா ஸ்தேவான் என்ற தேவமனிதனை கல்லெறிந்து கொள்ளும்போது இந்த சவுல் என்பவன் அதற்கு உடந்தையாயிருந்தான். இன்னும் அநேகரை காவலில் போட்டு முதல் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட சபையை பாழாக்கிக் கொண்டிருந்தான். இதையெல்லாம் கர்த்தர் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பாரா? இஸ்ரவேல் மக்களுக்கு முதல் ராஜாவாக ஏற்படுத்தப்பட்ட சவுலும் கூட இப்படித்தான். கர்த்தருக்கு விரோதமாக செயல்பட்டான். அவனை தள்ளி ராஜ்யபாரத்தை தாவீதுக்கு கொடுத்தார் இல்லையா? ஆனால் இந்த சவுலை கர்த்தர் அப்படி செய்யாமல் இவனை முற்றிலுமாக மாற்றினார். எப்படி என்று கேட்கிறீர்களா?

ஒரு முறை சவுல் தமஸ்கு பட்டணத்துக்கு சமீபித்தபோது திடீரென ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது அவனோ தரையிலே விழுந்தான். அப்பொழுது சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லும் ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன் பயந்து போய் ஆண்டவரே நீர் யார் என்றான். அதற்கு கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற, இயேசு நானே முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். இப்பொழுது எனக்கு ஒரு வசனம் ஞாபகத்திற்கு வருகிறது அது என்ன வசனம் உங்களில் யாராவது அதை சொல்ல முடியுமா? இதோ நானே சொல்லி விடுகிறேன். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" (மத் 18 : 6) என்று நமதாண்டவராகிய இயேசு சொல்லியிருக்கிறார். அவர் நம்மீது எவ்வளவு கரிசனையுள்ளவர் பார்த்தீர்களா? இதை அறியாத சவுலோ கர்த்தருடைய பிள்ளைகளை துன்புறுத்த சீறிப்பாய்ந்தான்.

நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே, முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்ற வார்த்தையைக் கேட்ட சவுல் நடுநடுங்கி திகைத்து ஆண்டவரே நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர் நீ எழுந்து தமஸ்கு பட்டணத்துக்குள்ளே போ நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார். அப்பொழுது சவுலோடு போனவர்களுக்கு சத்தம் கேட்டது ஆனால் ஒருவரையும் காணவில்லை. சவுலோ தரையை விட்டு எழும்போது பார்வையில்லாதவனாய் கைலாகு

கொடுத்து நடத்தப்பட்டான். பின்பு அனனியா என்ற தேவ மனுஷன் அவனை சந்தித்தான் சவுல் ஞானஸ்நானம் பெற்றான்.

தேவனுடைய மார்க்கத்துக்கு விரோதமாக செயல்பட்ட இந்த சவுலை கர்த்தர் சந்தித்து, பவுலாக, பெரிய ஊழியக்காரனாக மாற்றினார். பார்த்தீர்களா? அது மட்டுமல்ல இவன் புதிய ஏற்பாட்டிலுள்ள பதிநான்கு புத்தகங்களை எழுதியுள்ளான். பவுல் எருசலேம் முதல் இல்லிரிக்கம் தேசம் வரைக்கும் சுவிசேஷத்தை பிரசங்கித்திருக்கிறார். தேவனுடைய பிள்ளைகளை துன்புறுத்துகிறவர்களை கர்த்தர் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டார். அவர்களுக்கு தான் யார் என்பதை உணர்த்துவார். முள்ளில் உதைக்கிறது உனக்கு கடினமாம் என்றார். உண்மைதானே கர்த்தர் முள்போன்றவர் அவரை உதைக்க நினைத்தால் யாருக்கு வலிக்கும் உதைக்கிறவர்களுக்குத்தானே. ஆக யாராக இருந்தாலும் சரி தேவனுடைய உண்மையான மார்க்கத்தை என்ன செய்ய முடியாது? அழிக்கவே முடியாது. எனவே, அன்பான தம்பி தங்கைகளே நீங்களும் சவுலைப் போல மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாமல், கர்த்தரால் தொடரப்பட்ட பவுலைப் போல கர்த்தருக்குப் பயந்து நன்மைசெய்து கர்த்தருக்குப் பிரியமாய் வாழவேண்டும். சரி தம்பி தங்கைகளே அடுத்த வாரம் சந்திப்போம். மனப்பாட வசனத்தை மறக்காமல் மாதமாதம் படிச்சிடுங்க.

***<u>மனப்பாட வசனம் :</u>***

" வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும் வானமும் பூமியும் ஒழிந்து போவது எளிதாயிருக்கும்"

(லூக்கா 16:17)

---

## வேத அறிவுப் போட்டியாளர்களுக்கு ஸ்தோத்திரம்



★ வேத அறிவுப்போட்டி பன்னிரண்டிலும் வெற்றி பெற்று முதலாம் இடத்தில் இருப்பவர் யார் ?

★ அவருக்கு என்ன பரிசு ?

**அடுத்த இதழில் எதிர்பாருங்கள்**

*ஆசிரியர்*

"ஜெயமோ கர்த்தரால் வரும்" நீதி 21 : 31



# "நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்!"

## YOU REACHED !

காணாமற் போய்விட்ட ஆட்டுக்குட்டி பல காயங்களோடு கால் ஒடிந்து, பசியினால் வாடி மெலிந்து கடைசியிலே தாயின் மடிக்கு வந்து அழுத்தமாக கவ்வி படுத்துக் கொண்டதைப் போல தேவனுடைய சமூகத்திலே வந்திருக்கிற உங்கள் யாவரையும் வாழ்த்துகிறேன். நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். கர்த்தர் நம் அனைவரின் மீதும் பரிதாபம் கொண்டு, நம்முடைய வேதனைகளையும், நோய்களையும் நீக்கி சுகம் தருவறாக! கடவுள் நமது வலது, இடது பக்கமாக கேடகம் போல நின்று அந்தகார கிரியைகளினின்று நம்மை இரட்சிப்பாராக! நாம் தேவனுடைய பிள்ளைகளாக, அவருக்கு சொந்தமானவர்களாக இருக்கிறோம்.

இஸ்ரவேலர்கள் முற்காலத்தில் தேவனுடைய ஜனங்களாக இருந்தார்கள். அவர்கள் வனாந்திரத்தின் வழியாக கடந்து போகும்படி மோசேயின் வார்த்தைகளை விசுவாசித்து ஏற்றுக் கொண்டு சென்றார்கள். அநேககாரியங்களை கண்ணாரக் கண்டு ருசித்தார்கள். ஆனால் புறப்பட்ட மக்களான ஆறு இலட்சம் பேர்கள் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ததினால் அழிக்கப்பட்டார்கள். பூமிக்குரிய மனிதனாகிய மோசேயின் வார்த்தையை கேட்டு முழுமையாக விசுவாசியாதவர்களின் முடிவு இப்படியிருக்குமானால் ஜீவனுள்ள ஆவியின் பிரமாணமாகிய இயேசுவின் வார்த்தைகளுக்கு நாம் எவ்வளவு அதிகமாக பயந்து கீழ்படிய வேண்டும்.

ஒருவன் ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே அவன் இஸ்ரவேலர் 40 ஆண்டுகாலம் நடந்து அடையாமற்போன கானானின் அனுபவத்தை அடைந்து விடுகிறான்! தேவனே அதை ஒவ்வொருவருக்கும் இலவ்சமாக உடனே கொடுத்துவிடுகிறார். இயேசு கிறிஸ்துவுக்குள், சீயோன் மலையினிடத்திற்கு வந்திருக்கிறோம். சீயோன் என்பதற்கு அடைக்கலம் என்று அர்த்தமாம். அடைக்கலமாகிய இயேசுவினிடத்திற்கு வந்திருக்கிறோம். துரத்தி வரும் பருந்திற்கு பயந்து, நடுங்கி வரும் புறாவுக்கு அடைக்கலம் கொடுப்பதைப் போல இதோ தேவன் நம்மை பாவ உலகிலிருந்து தப்பி ஓடிவரும் போது அடைக்கலமாகிய சீயோனிடத்தில் சேர்த்துக் கொண்டார். சீயோனிலிருந்து கர்த்தர் பிரகாசிக்கிறார் சங். 50 : 2.

ஜீவனுள்ள நகரமாகிய எருசலேமினிடத்திற்கு வந்திருக்கிறீர்கள்! எருசலேம் தேவனுடைய வீடு, சமாதானப்பிரவு தம்மை அங்கிருந்து வெளிப்படுத்துகிறார். எருசலேம் தேவனுடைய ஆலயம் எருசலேமிடத்திலிருந்து தேவனுடைய வார்த்தை புறப்பட்டது.

ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களிடத்திற்கு வந்து சேர்ந்தீர்கள். ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள் இன்றைக்கு நம்மை சுற்றிலும் இருக்கிறார்கள் என்று நினைக்கும் போது எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கிறது! ஆபத்திலும், தீங்கு வேளையிலும் அவர்கள் நம்மோடு கூட இருக்கிறார்கள். தானியேல் சிங்ககெபியில் போடப்பட்ட போது தேவதூதர்கள் வந்து சிங்கங்களின் வாய்களை கட்டி போட்டதாக வாசிக்கிறோம். நம்முடைய கால்கள் கல்லில் இடறும்போது நம்மை தாங்கும்படி தம்முடைய தூதர்களுக்கு தேவன் கட்டளையிட்டிருக்கிறார். ஒரு மனுஷன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறதினால் இந்த ஆசீர்வாதம்.

அடுத்து பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும் வந்து விட்டீர்கள். ஒருவன் சபையில் இருந்தால் அவனுடைய பெயர் பரலோகத்தில் எழுதியிருக்கிறது. அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதியிருக்கிறது என்று பிலி 4 : 3ல் வாசிக்கிறோம். லூக் 10 : 20 பரலோக ராஜ்ஜியத்தில் பெயர்கள் எழுதப்படுகிறது. யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும் நாம் இப்போது வந்திருக்கிறோம். நம்முடைய தேவன் யாவருக்கும் நியாயம் செய்கிறவராக இருக்கிறார். பிரியமானவர்களே! நியாதிபதியினிடத்திற்கே நாம் வந்துவிட்டோம். ஆச்சரியம் என்னவென்றால் நாம் நீதிமன்றத்திற்கு போக வேண்டிய அவசியமே இல்லாமல், நீதிபதியே நம்மை மன்னிக்க தயாராக இருக்கிறார்.

பூரணமாக்கப்பட்ட நீதிமான்களின் ஆவிகளிடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறோம். நமக்கு முன்பு வாழ்ந்த நீதிமான்கள் பூரணமாக்கப்பட்ட மனிதர்கள் பரதீசியிலே இருக்கிறார்கள். ஏழை லாசரு மரித்தபோது பூரணராக்கப்பட்ட ஆபிரகாமின் மடியிலே போய் விடப்பட்டான் என்று லூக்கா 16 : 22ல் வாசிக்கிறோம். ஆகையால் பூரணராக்கப்பட்டவர்கள் பரதீசியில் இருக்கிறார்கள். நாம் அவர்களின் ஆவிகளிடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறோம். மேலும் 2 கொரி 12 : 3 பரலோகத்திற்கு பவுல் எடுத்துக் கொள்ளப்பட்டதாகவும் அங்கே மனுஷர் கேட்டிராத வார்த்தைகளை கேட்டதாகவும் கூறியிருக்கிறார்.

அடுத்ததாக புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவினிடத்திற்கும் வந்திருக்கிறோம் நமக்கும் தேவனுக்கும் இடையில் புது உடன்படிக்கை ஒன்று உண்டு, ஐந்தாண்டு திட்டமோ, பத்தாண்டு திட்டமோ அல்ல நித்திய திட்டம். இந்த நித்திய திட்டத்தின் மத்தியஸ்தராக இயேசு கிறிஸ்து இருக்கிறார்.

இறுதியாக ஆபேலினுடைய இரத்தம் பேசினவைகளைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இயேசுவின் இரத்தத்தினிடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறோம். ஆபேலினுடைய இரத்தம் பேசினதைவிட இயேசுகிறிஸ்துவின் இரத்தம் எப்படிப்பட்ட நன்மையானவைகளை பேசுகிறது? காயீன் ஆபேலோடு வயல்வெளியில்

பேசிக் கொண்டே நடந்து சென்றான். திடீர் என்று சகோதரனை விரோதியைப் போல தாக்கினான். ஆபேலின் இரத்தத்தை தண்ணீரைப் போல ஊற்றினான். இரத்தத்தில் தான் உயிர் இருக்கிறது என்று வேதம் சொல்கிறது. ஆபேலின் இரத்தம் வானத்தையும், பூமியையும் உண்டாக்கின தேவனை நோக்கி கூப்பிட்டது. ஆபேலின் இரத்தம் பேசினது என்றால் என்னென்ன காரியங்களை பேசியிருக்கும். தன்னை சகோதரன் கொன்று விட்டான். அவனை விசாரிக்க வேண்டும். அவனுக்கு மன்னிப்பு அல்ல தண்டனை கொடுக்க வேண்டும் என்று பேசியிருக்குமோ! நிச்சயமாக கொலைகாரனை ஆசீர்வாதியும் என்று பேசியிருக்காது. அவனுடைய உயிர் பிரியும்போது கர்த்தரை நோக்கி அவனுடைய இரத்தம் முறையிட்டிருக்கும்.

மாறாக இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நன்மையானவைகளை பேசியிருக்கிறது.

ஆண்டவர் இயேசு சிலுவையில் நமக்காக தொங்குகிறார். சிரசிலே முள்முடி அழுத்தமாக புதைந்திருக்கிறது. கைகால்களில் ஆணிகள் கடாவப்பட்டிருக்கிறது. சுற்றி நிற்கிறவர்கள் உயிர் போகும் அளவிற்கு தூஷிக்கிறார்கள். அவருடைய உடல் முழுவதும் இரத்தம் வழிகிறது. அப்பொழுது அவர் “பிதாவே இவர்களை மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்கள்” என்கிறார். அநியாயமாய், பாவமில்லாமல் சிந்தப்பட்ட அந்த இரத்தம் நன்மையானவைகளைப் பேசினது, எல்லாருக்கும் தேவனுடைய இரக்கம் மன்னிப்பு வேண்டும் என்று பேசினது. அந்த இரத்தத்தினிடத்திற்கு நீங்கள் வந்து சேர்ந்தீர்கள். மிக உச்சகட்டமாகிய ஆவிக்குரிய நிலையை கல்வாரி மலையில் உச்சியில் அடைகிறீர்கள்.

எகிப்திலிருந்து புறப்பட்ட ஒரு இஸ்ரவேலன் வானாந்திரத்திலே நடந்து கொண்டிருக்கிறான். ஒரு ஆண்டு, இரண்டு, மூன்று என 39 ஆண்டுகளாயிற்று இன்னும் சேரவேண்டிய இடத்திற்கு வந்து சேரவில்லை. புறப்பட்டவர்கள் எல்லாரும் மரித்துப் போனார்கள். ஆனால் யோசுவாவும், காலேபும் 40வது ஆண்டிலும் நடந்து கொண்டிருக்கிறார்கள். இறுதியாக அவர்கள் வாக்குதத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது பல விதமான ஆசீர்வாதமான நிலைகளை சுலபமாக, இலவசமாக அடைந்து விடுகிறான். ஞானஸ்நானம் பெற்ற அந்த பொழுதிலே உன்னதமான ஆவிக்குரிய நிலையை அடைகிறான். இதை வாசித்துக் கொண்டிருக்கிற அன்பரே! நீங்கள் எப்பேர்பட்ட மக்களாகவும் பல்வேறு வாழ்க்கை சூழ்நிலைகளில் இருக்கிறவர்களாகவும் பல்வேறு மனநிலைகளிலும் இருக்கலாம் நீங்கள் அடைக்கலமும் புகலிடமுமாகிய சீயோன் மலையினிடத்திற்கு வாருங்கள். அது உங்களுக்காக காத்திருக்கிறது.

நீங்கள் பரம எருசலேமிடத்திற்கு வந்து விட்டீர்கள் அங்கே தேவ சமாதானம் காத்திருக்கிறது.

ஆயிரம் ஆயிரமான தேவ தூதர்களிடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். அவர்கள் உங்களை கையில் ஏந்திக் கொள்வார்கள்.

நீங்கள் சர்வசங்கமாகிய சபையில் சேர்ந்திருப்பதால் உங்கள் பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

நீங்கள் நியாயாதிபதினிடத்திற்கு வந்து விட்டீர்கள் நீதிமன்றத்திற்கு அல்ல. நீதிபதியினிடத்திற்கு அவரோ உங்களை சார்ந்தவர்.

நீதிமான்களாக்கப்பட்ட, பூரணராக்கப்பட்ட ஆவிகளிடத்திற்கு வந்து விட்டீர்கள். தேவனை தொழுது கொண்டு மகிமைப்படுத்திக் கொண்டிருக்கிற நம்மோடு அவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். எவ்வளவு பெரிய பாக்கியம்!

அது மட்டுமல்ல புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கு வந்து சேர்ந்தீர்கள். இந்த உடன்படிக்கை மாறாதது, உடன்படிக்கை பண்ணினவரும் பின்வாங்குவதில்லை. காரணம் இன்றைக்கு மனிதர்களுக்குள்ளே கணவன் மனைவி, பெற்றோர் பிள்ளைகள், பலவித்மான உறவுகள் நாடுகள் தங்களுடைய உடன்படிக்கையை மீறி வருகிறார்கள். முறித்துக்கொள்கிறார்கள்.

நாம் இயேசுவோடு செய்திருக்கிற உடன்படிக்கை நித்தியமானது அதனால் பின்மாற்றத்திற்கு வாய்ப்பே இருக்காது.

ஆபேலின் இரத்தம் பேசினவைகளைப் பார்க்கிலும் நலமானவைகளை பேசுகிற இயேசுவின் இரத்தம் தான் நமக்கு இன்றைக்கு தேவை. 'இயேசுவின் இரத்தம் ஜெயம்' என்கிற வசனம் வேதத்திலே கிடையாது. ஆனால் இயேசுவின் இரத்தம் ஜெயம் என்கிற (Concept). அர்த்தம் வேதத்தில் இருக்கிறது. சாத்தானை ஜெயித்த இயேசுவின் இரத்ததில் ஜெயம் நிச்சயம் உண்டு. மரணத்தை வென்று நித்திய இரட்சிப்பை நமக்களித்த அந்த இரத்தம் நமக்காக நன்மையானவைகளை பேசுகிறது 1 யோவா 2 : 1.

என் பிள்ளைகளே நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார் 1 யோ 2 : 1.

இன்றும் தேவன் நம்மோடு பேசுகிறார். தமது வசனத்தின் மூலமாக எல்லா மனுஷரோடும் பேசுகிறார். உங்களுடைய நிலையை அவர் அறிவார். ஆரம்பத்திலே இச்செய்தியில் குறிப்பிட்ட ஆட்டுக்குட்டியைப் போல இருக்கிறீர்கள். நன்மை தீமை தெரியாமல் விழுந்து விட்டீர்கள்! முட்கள் கீறிவிட்டது! காப்பாற்றுவார் இல்லாமல் கதறுகிறீர்கள்! சாபங்களை சுமந்து சோர்ந்து போகிறீர்கள்! தொலைந்து போன ஆட்டுக்குட்டி தாயினிடத்திற்கு திரும்பினது போல மந்தையின் மேய்பராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திற்கு திரும்புங்கள்.

***– Selected***

வெளிப்படுத்தின விசேஷம் | புதிய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | REVELATION

பொருள் : கிறிஸ்துவே ஜெயவீரர்
ஆக்கியோன் : யோவான் (அப்போஸ்தலன்)
காலம் : 96 கி.பி.

**திட்டவரைக் குறிப்பு :**

| | | |
|---|---|---|
| A. | கிறிஸ்து ஜீவனுள்ளவராய் சபையில் | 1 : 1 - 3 : 22 |
| B. | கிறிஸ்து ஜீவனுள்ளவராய் மோட்சத்தில் | 4 : 1 - 16 : 21 |
| C. | கிறிஸ்து வெற்றிவீரராய் போரில் | 17 : 1 - 21 : 8 |
| D. | கிறிஸ்து மகிமையுள்ளவராய் நியாயத்தீர்ப்பில் | 21 : 9 - 22 : 21 |

**சிறப்புச் செய்தி :**

ஒவ்வொரு பிராந்திய சபையையும் கிறிஸ்து அக்கரையோடு கவனித்து வருகின்றார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | எபேசு | 2 : 1-7 | 5. | சர்தை | 3 : 1-6 |
| 2. | சிமிர்னா | 2 : 8-11 | 6. | பிலதெல்பியா | 3 : 7-13 |
| 3. | பெர்கமு | 2 : 12-17 | 7. | லவோதிக்கேயா | 3 : 14-22 |
| 4. | தியத்திரா | 2 : 18-29 | | | |

**வரலாற்று பின்னணி :**

ஆதியாகமம் எல்லாவற்றுக்கும் ஆரம்பமும் துவக்கமுமாயிருப்பது போல, வெளிப்படுத்தின விசேஷமாகிய இந்த புத்தகம் எல்லாவற்றுக்கும் கடையானதாகவும், முடிவானதாகவும் இருக்கின்றது. இப்புத்தகம் தேவனுடைய மீட்பின் திட்டம் நிறைவேறுவதை போதிக்கின்றது.

உண்மையாய் திரையை நீக்கி (Vnveiling) முடிவை நமக்கு தேவன் காண்பிக்கின்றார். குறிப்பாக யோவான் அப்போஸ்தலன் ரோம ஆட்சிகாலத்தில் அமைந்த ஏழுபிராந்திய சபைகளில் வழியாக வெளிப்படுத்தலை அறிவிக்கின்றார். (வெளி. 1:3-4) நீரோ (Nero) மன்னன் யோவானை அப்பொழுது நாடு கடத்தி பத்மு (Patmos) என்னும் தீவிலே வைத்தான் (வெளி 1 : 9).

கிறிஸ்துவின் சபை அந்நாட்களில் மிகுந்த உபத்திரவம் அடைந்திருந்தது (வெளி 2 : 10-13). நீரோவிற்கு பிறகு தோமினியின் (Domitiam) 81-86 AD. என்பவன் சபைக்கு எதிராக கொடுமை செய்தான், தன்னை மக்கள் வணங்கும்படி கட்டாயப்படுத்தினான்.

இக்கால கட்டத்தில் பரிசுத்தவான்களுக்கு ஆதரவாகவும், முடிவிலே கிறிஸ்துவே ஜெய வீரர் எனவும் (வெளி 19 : 16) ஆரம்பமும் முடிவும் எனவும் (வெளி. 22: 15) சீக்கிரமாய் அவர் வருகிறார் எனவும் யோவான் எழுதுகின்றார் (வெளி 22 : 7, 12, 20).

*– Selected*

# வேத அறிவுப் போட்டி எண். 12

*குறிப்பு :*

**வேத அறிவுப் போட்டியில் கலந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அஞ்சல் அட்டையில் கீழ்கண்ட கேள்விகளுக்கு வேத வசன ஆதாரத்துடன் விடைகளை இம்மாதம் இறுதிக்குள் எழுதி அனுப்புங்கள். அத்துடன் உங்கள் பதிவெண்ணையும் மறக்காமல் எழுதுங்கள். 12 போட்டியில் வெற்றி பெற்று முதலாவது வருபவருக்கு சிறப்பான பரிசு காத்திருக்கிறது. தயவு செய்து உங்கள் சுயமுயற்சியில் கண்டு பிடியுங்கள்.**

1. பொருளாசையை வெறுக்கிறவன் எதைப் பெறுவான்?
2. தன் பெலத்தினால் தேவனோடே போராடினவன் யார்?
3. ராஜ்யம் யாருடையது: அவர் ஜாதிகளை என்ன செய்கிறவர்?
4. உங்கள் அவயவங்களை எதற்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள்?
5. புறம்பே இருக்கிறவர்களைக் குறித்து யார் தீர்ப்புச் செய்வார்?
6. நான் ஓடுகிறதும், ஓடினதும் வீணாகாதபடிக்கு எண்ணிக்கையுள்ளவர்களுக்கே தனிமையாய் விவரித்துக் காண்பித்தேன் என்ற அப்போஸ்தலன் யார்?
7. ஸ்திரீயானவளே வஞ்சிக்கப்பட்டு எதற்கு உட்பட்டாள்?
8. நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே யார் வரும் காலத்திலும் நடக்கும்?
9. அந்நிய தெய்வங்களை விலக்கிப்போட்டு, உங்களைச் சுத்தம் பண்ணிக் கொண்டு, உங்கள் வஸ்திரங்களை மாற்றுங்கள் என்றவன் யார்?
10. பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் எப்படிப்பட்டவன்?

# நடப்புச் செய்திகள்

1. *திண்டுக்கல் அருகே உள்ள சிறுமலை சுற்றுலா தளத்திற்கு ஒரு கோடி செலவில் தார்ரோடு போட திட்டமிட்டிருப்பதாக மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.*
2. *தொட்டில் குழந்தைகள் திட்டத்திற்கு புதிய ஆட்சியில் புத்துயிர் கிடைத்துள்ளது.*
3. *கேரளாவில் ஆண் செக்ஸ் தொழிலாளர்கள் அதிகரிப்பு*
4. *ஈரான் அதிபர் முகமது கதாமி இரண்டாவது முறையாக அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.*
5. *பிலிப்பைன்ஸ் நாட்டில் அரசு படைகளின் தாக்குதலை சமாளிக்க முஸ்லீம் தீவிரவாதிகள் அப்பாவிகள் 200 பேரை பிணையக் கைதிகளாக பிடித்து வைத்துள்ளனர்.*

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**


எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.



ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி
வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி

All are Welcome

கிறிஸ்துவின் சபை
17.2.102-D/5, ராஜன் நகர்
வத்தலக்குண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்
✆ : (04543) 23278



# HEAR THE VOICE OF TRUTH

## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| **HINDI** | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| **TELUGU** | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA GOOTAM |
| **TAMIL** | Sunday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| **MALAYALAM** | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course,
Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

**Monthly Magazine**

**FOR FREE DISTRIBUTION ONLY**

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.